


Metro லீடர்

# மெட்ரோ LEADER

தமிழ் பேசும் மக்கள் 'நமக்கான நாளிதழ்'




லீடர்: 03 | இதழ் -260 | 03.02.2023 | பக்கங்கள்: 06 | editorml21@gmail.com | விலை: 50/-

# பிரிவினையை உண்டாக்கும் 13ஐ நீக்குக!



## சுதந்திர தினமன்று நடந்தே தீரவேண்டும் என்கிறார் பாஹியங்கல ஆனந்த சாகர தேரர்

சுதந்திர தினமன்று அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தத்தினை நீக்குவதாக அறிவிக்க வேண்டும் இல்லையெனில் எதிர்வரும் 8 ஆம் திகதி மாபெரும் மாநாடு ஒன்றினை ஏற்பாடு செய்வதாக வண. பாஹியங்கல ஆனந்த சாகர தேரர் தெரிவித்திருந்தார்.

ஊடக சந்திப்பொன்றில் அவர் இது தொடர்பில் தொடர்ந்தும் கருத்துத் தெரிவிக்கையில்,

அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தத்தினால் இந்நாட்டில் அறுபதாயிரம் மக்களை பலியெடுத்ததை அநுர குமார ஒருநாளும் மறக்க வேண்டாம். ஹரிணி அமரசூரியவுக்கு அது பற்றி தெரியாது என்று நினைக்கிறேன். அவர் புதிதாக கட்சியில் சேர்ந்த ஒருவர். அவருக்கு அனுபவம் இல்லை என்பது எங்களுக்கு தெரியும்.

02

# மகாநாயக்கர்களே முட்டுக்கட்டை!



### முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஸ்ரீநேசன் விசனம்

அன்று பண்டா செல்வா ஒப்பந்தம் கிழித்தெறியப்படுவதற்கு காரணமான மகாநாயக்கர்களே, இன்று மாகாண சபைகளுக்கான காணி, பொலிஸ் அதிகாரங்களை வழங்கும் விடயத்திலும் தடையாக இருக்கின்றார்கள் என தமிழ் தேசிய கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற

02

# அச்சமின்றி முன்னேற விடுங்கள்!

### சுதந்திர தின செய்தியில் ஜனாதிபதி ரணில்



நூறாவது சுதந்திர தினத்திற்குள் உயர் பொருளாதார வளம் கொண்ட உலக மூலதனத்தின் கேந்திர நிலையமாக விளங்கும் இலங்கையை உருவாக்க இன்று மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் அச்சமின்றி மேற்கொள்ளப்படும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க75 ஆவது தேசிய

02

## மின்வெட்டு கோரிக்கையை நிராகரித்தது உயர் நீதிமன்றம்

க.பொ.த. உயர் தர பரீட்சை காலத்தில், இலங்கை மின்சார சபை மின்வெட்டு மேற்கொள்வதை தடுக்கும் வகையில், இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு கோரிய

02

## மாகாண சபை அதிகாரப் பகிர்வு என்பது ரணிலின் அரசியல் வியூகம்



தூக்கில் தொங்குவதற்கு கயிறு இல்லாமல் அரசியல் ரீதியாக

02

## சுற்றுநிருபத்தால் தேர்தலுக்கு தடையில்லை



### தேர்தல்கள் ஆணைக்குழு

மீண்டெழும் செலவுகளை 6 வீதத்தால் குறைத்து வெளியிடப்பட்டுள்ள புதிய சுற்றறிக்கையினால் உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கு இடையூறு ஏற்படாது என தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

தேர்தலுக்கான செலவை குறைப்பதற்கு தேர்தல்கள் ஆணைக்குழு நடவடிக்கை எடுத்துள்ளதாக தேர்தல்கள் ஆணைக்

02

## சுதந்திர தின நிகழ்வில் பங்கேற்கப்போவதில்லை சஜித், டலஸ் அறிவிப்பு!



நாளை (04) நடைபெறவுள்ள 75ஆவது தேசிய சுதந்திரக் கொண்டாட்டத்தில் பங்கேற்கப்

02

## உயர் விருதைப் பெற்றார் கரு

தேசபந்து கரு ஜயசூரியவுக்கு இலங்கையின் உயரிய தேசிய விருதானஸ்ரீலங்காபிமன்யா

02

## பிரிவினையை உண்டாக்கும் 13ஐ...

அவர் பத்திரிகை ஒன்றுக்கு 13 ஆம் திருத்தம் நல்லது என்று தெரிவித்திருந்தார். அவரது அரசியல் நிலைப்பாடு அரசியல் அனுபவம் குறித்து எமக்கு சிக்கல்கள் நிறையவே உள்ளன.

நாம் கேட்கிறோம், ஜேவிபி இனது நிலைப்பாட்டையா ஹரிணி அமரசூரிய தெரிவித்தார்? அதனை அநுர குமார பொதுப் பிரசாரத்தில் தெரிவிக்க வேண்டும். அது உண்மை எனில் ஜேவிபி மீண்டும் பழைய பாதைக்கே செல்ல வேண்டியிருக்கும். அப்படியாயின் தேசிய அடையாளத்திற்கு சுதந்திரத்திற்கு விசேடமாக சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்கள் இடையே உள்ள நல்லுறவை இல்லாமலாக்கி பிரிவினைகளை உண்டாக்க வேண்டாம் எனக் கேட்டுக் கொள்கிறோம். அறுபதாயிரம் பேரை பலி கொடுத்தது இதற்காகவா எனக் கேட்க விரும்புகிறோம்.

இந்தப் பிரிவினை வாதத்தினை உண்டாக்க முயற்சிக்கும் இந்த 13 ஆவது திருத்த சட்டத்தினை உடனடியாக வாபஸ் பெற வேண்டும், அதுவும் சுதந்திர தினமன்று 13 ஆவது திருத்தத்தினை நீக்குவதாக அறிவிக்க வேண்டும். அப்படியில்லாதவிடத்து அதற்கு எதிராக நாம் எதிர்வரும் 8 ஆம் திகதி கொழும்புக்கு பெரும் மாநாடு ஒன்றினை ஏற்பாடு செய்வோம். எனத் தெரிவித்திருந்தார்.

## அச்சமின்றி முன்னேற விடுங்கள்...

சுதந்திர தினத்தை முன்னிட்டு விடுத்துள்ள விசேட அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

அதற்காக மக்களின் நம்பிக்கையையும் ஆசீர்வாதத்தையும் எதிர்பார்க்கிறேன் என ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

75 ஆவது தேசிய சுதந்திர தினத்தை கொண்டாடும் இந்த சந்தர்ப்பம் நமக்கு மிகவும் முக்கியமான மற்றும் சவாலான நேரம்.

கடந்த 75 ஆண்டுகளில், நாம் பெற்றதை விட இழந்தவை அதிகம். உலகப் பொருளாதாரத்தில் கணிசமான அளவு பெரிய பங்கைப் பெறுவதற்குத் தேவையான உத்திகளைத் திட்டமிடுவதே இந்த ஆண்டு எங்களின் முதன்மையான நோக்கமாகும் என ஜனாதிபதி மேலும் தெரிவித்திருந்தார்.

## மகாநாயக்கர்களே...

உறுப்பினர் ஞா.ஸ்ரீநேசன் விசனம் தெரிவித்துள்ளார்.

இதே மகாநாயக்கர்கள் தான் தடையாக இருக்கின்றார்கள். காரணமாக இருந்தார்கள். எனவே உள்நாட்டு பொறிமுறை என்பது ஏமாற்று வித்தையாகவே அமைந்துள்ளது.

இந்தியா உள்ளிட்ட சர்வதேச நாடுகள் தமிழ் மக்களின் இனப்பிரச்சனையை தீர்ப்பதற்கு உரிய செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டும் என இவ்வேளையில் கேட்டுக் கொள்கின்றேன். என தெரிவித்தார்,

## மின்வெட்டு கோரிக்கையை...

இடைக்கால உத்தரவுக்கான கோரிக்கையை உயர் நீதிமன்றம் நிராகரித்துள்ளது.

மின்சார சபை உள்ளிட்டோர் மீது மனித உரிமைகள் ஆணைக்குழு தாக்கல் செய்த மனுவை விசாரணை செய்த நீதிமன்றம் இந்த உத்தரவை பிறப்பித்துள்ளது.

குறித்த மனுவை எதிர்வரும் 7 ஆம் திகதி மீண்டும் விசாரணைக்கு எடுக்க நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

## சுற்றுநிருபத்தால் தேர்தலுக்கு...

குழுவின் தலைவர் சட்டத்தரணி நிமல் புஞ்சிஹேவா தெரிவித்துள்ளார்.

ஏதேனுமொரு வகையில் திறைசேரியிடமிருந்து கோரப்பட்டுள்ள நிதி கிடைக்காமல் போகும் பட்சத்தில், அது பிரச்சினையை ஏற்படுத்தும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கு 10 பில்லியன் ரூபா செலவாகும் என மதிப்பீடு செய்யப்பட்டுள்ள நிலையில், குறித்த தொகையை வரவு செலவுத் திட்டத்தினூடாக விடுவிப்பதற்கு சமீபத்தில் பாராளுமன்றம் அனுமதி வழங்கியது.

2023 ஆம் ஆண்டிற்காக ஒதுக்கப்பட்டுள்ள மீண்டெழும் செலவுகளை 6 வீதத்தால் குறைத்தல், அரசாங்க செலவுகளை முகாமைத்துவம் செய்தல் தொடர்பில் நிதி பொருளாதார ஸ்திரத்தன்மை, தேசிய கொள்கைகள் அமைச்சினால் சுற்றறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

## அணிந்து கொள்ளும் வகையில் கேக் செய்து கின்னஸ் சாதனை!





சுவிட்சர்லாந்தை சேர்ந்த நடாஷா என்பவர் திருமண ஆடை வடிவமைப்பில் அணிந்து கொள்ளும் வகையில் கேக் ஒன்றை வடிவமைத்து கின்னஸ் சாதனை படைத்துள்ளார். சுவிட்சர்லாந்தைச் சேர்ந்தவர் நடாஷா கோலின் கிம். இவர் ஒரு கேக் தயாரிப்பாளர் ஆவார். நடாஷாஸ்வீட்டி கேக்ஸ் என்ற பேக்கரியை நடத்தி வருகிறார். இவர் வித்தியாசமான முறையில் கேக் வடிவமைத்து கின்னஸ் சாதனை படைக்கும் முயற்சியில் ஈடுபட்டார்.

இதற்காக நடாஷா, திருமண ஆடை வடிவில், அணியக் கூடிய வகையில் கேக் ஒன்றை வடிவமைத்துள்ளார். இந்த கேக் சுமார் 131.15 கிலோ கிராம் எடையில் உருவாக்கப்பட்டு உள்ளது. இந்த பிரமிக்க வைக்கும் கேக் கடந்த மாதம் 15ஆம் திகதியன்று சுவிட்சர்லாந்தின் பெர்னில் நடந்த சுவிஸ் உலக திருமண கண்காட்சியில் வெளியிடப்பட்டது. கண்காட்சிக்கு வருகை தந்த விருந்தினர்களுக்கு கேக் வழங்கப்பட்டது. இந்த கேக் தற்போது கின்னஸ் சாதனையில் இடம்பெற்றுள்ளது. கின்னஸ் உலக சாதனையாளர்கள் நடாஷா வடிவமைத்த இந்த கேக் உடையின் வீடியோவை இன்ஸ்டாகிராமில் பகிர்ந்துள்ளனர். இந்த வீடியோ 68,000இற்கும் மேற்பட்ட லைக்குகளைப் பெற்றுள்ளது.

## மாகாண சபை அதிகாரப் பகிர்வு...

ஆதரவற்ற நிலையில் இருந்த விமல் வீரவன்சவிற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தூக்கில் தொங்குவதற்கு கயிற்றை வழங்கியுள்ளார் என மக்கள் விடுதலை முன்னணியின் பொதுச் செயலாளர் டில்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

ஒருபோதும் நிறைவேற்ற முடியாத மாகாண சபை அதிகாரப் பகிர்வு குறித்த தலைப்பை முன்வைக்க ஜனாதிபதி மேற்கொண்ட முயற்சியின் மூலம் பாராளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்சவுக்கு இந்த வாய்ப்பு கிடைத்துள்ளதாக அவர் கூறுகிறார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மாகாண சபை முறைமையை ஒருபோதும் முழுமையாக அமுல்படுத்த மாட்டார் எனவும் அதற்குப் பதிலாக சமூகத்தில் விவாதத்தை ஏற்படுத்தி அரசியல் ரீதியாக தனது அதிகாரத்தை பலப்படுத்திக்கொள்ளும் வியூக அரசியல் நடைமுறையை கையாண்டுள்ளதாகவும் குறிப்பிடப்படுகின்றது.

தற்போதுள்ள மாகாண சபை முறைமைக்கு பதிலாக புதிய அதிகாரப் பகிர்வு வேலைத்திட்டம் தொடர்பில் தமது கட்சியின் கவனம் செலுத்தப்பட்டுள்ளதாக சமூக வலைதளமொன்ருக்கு வழங்கிய செவ்வியில் அவர் மேலும் தெரிவித்திருந்தார்.

## சுதந்திர தின நிகழ்வில்...

போவதில்லை என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

இதேவேளை, அரசாங்கத்திலிருந்து விலகி பாராளுமன்றத்தில் சுயாதீனமாக செயற்படும் பாராளுமன்ற உறுப்பினர் டலஸ் அழகப்பெரும மற்றும் குழுவினரும் இவ்வருட சுதந்திர தின நிகழ்வில் கலந்து கொள்ளப் போவதில்லை எனத் தெரிவித்துள்ளனர்.

அரசாங்கத்தின் வேலைத்திட்டத்துடன் உடன்பட முடியாத காரணத்தினால் தான் சுதந்திர தின நிகழ்வில் பங்கேற்கப் போவதில்லை என டலஸ் அழகப்பெரும தெரிவித்துள்ளனர்.

## உயர் விருது பெற்றார்...

என்ற பட்டத்தை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வழங்கியுள்ளார்.

கொழும்பில் உள்ள ஜனாதிபதி மாளிகையில் இன்று ஜனாதிபதி விக்கிரமசிங்கவினால் கரு ஜயசூரியவிற்கு இந்த வாழ்நாள் முழுவதும் உயரிய விருது வழங்கப்பட்டதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

82 வயதான முன்னாள் சபாநாயகரும், தற்போதைய சமூக நீதிக்கான தேசிய இயக்கத்தின் தலைவருமான அவர், மதிப்புமிக்க விருதை பெறும் எட்டாமவராகும்.

1986 ஆம் ஆண்டு முன்னாள் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாச இந்த விருதை முதன் முதலில் பெற்றுக்கொண்ட அதேவேளை 2017 ஆம் ஆண்டு டபிள்யூ.டி. அமரதேவ இந்த விருதைப் பெற்றார்.

சர்வோதய இயக்கத்தின் ஸ்தாபகரான ஏ.டி.ஆரியரத்ன 2007 இல் ஸ்ரீலங்காபிமன்யா என்ற பட்டத்தைப் பெற்றவர்.

இலங்கைக்கு மிகச் சிறந்த மற்றும் சிறந்த சேவையை வழங்கியவர்களுக்கு இந்த விருது வழங்கப்படுகிறது.

முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரிய கடந்த பொதுத் தேர்தலில் போட்டியிடாமல் பொதுப் பதவியிலிருந்து விலகி சமூக நீதிக்கான தேசிய இயக்கத்தை முன்னெடுத்து வருகிறார்.

# வடக்கிலிருந்து கிழக்கு நோக்கிய எழுச்சிப் பேரணி!

## -யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் அழைப்பு-

யாழ் பல்கலைக்கழக மாணவ ஒன்றியத்தினராகிய நாம், கிழக்கு பல்கலைக்கழக மாணவர்களுடன் ஒன்றிணைந்து ஶ்ரீலங்காவின் சுதந்திரதினமான நாளை பெப்ரவரி 4 ஆம் திகதியினை கரிநாள் எனப் பிரகடனப்படுத்தி, ஶ்ரீலங்கா அரசு தமிழ் மக்கள் மீது தொடர்ச்சியாக மேற்கொண்டுவரும் ஆக்கிரமிப்புக்கள், அடக்குமுறைகளை எதிர்த்தும், ஆக்கிரமிப்பு சிங்கள இராணுவம் எமது மண்ணிலிருந்து வெளியேறவேண்டும் என்பதை வலியுறுத்தியும், தமிழ் தேசிய இனத்தின் பிறப்புரிமையான சுயநிர்ணய உரிமையை வலியுறுத்தியும், இலங்கையின் இன்றைய பொருளாதாரப் பின்னணியில் எழுந்துள்ள சூழலில் ஏற்பட்டுள்ள அழுத்தங்கள் காரணமாக முன்னெடுக்கப்பட்டுவரும் பேச்சுவார்த்தை எனும் போலி நாடகத்தினை தோலுரித்து சர்வதேச சமூகத்திற்கு காட்டவேண்டிய அவசியத்தாலும், கூட்டாக தமிழ் மக்கள் தமது நிலைப்பாடுகளை வலுவாக முன்வைக்க வேண்டியதன் அவசியத்தின் அடிப்படையிலும் வடக்கிலிருந்து கிழக்கு வரையான பேரணியொன்றைத் திட்டமிட்டு ஊடகத்தினரை கடந்த ஜனவரி 26 ஆம் திகதி சந்தித்திருந்தோம்.

பின்னர் எமது கரிநாள் பிரகடனம் மற்றும் பேரணிக்கான நிலைப்பாடுகளை எமது மக்களுடன் கலந்துரையாடும் நோக்குடன் கடந்த ஒரு வார காலமாக வடக்கு கிழக்கெங்கும் மக்களுடனும், மக்கள் பிரதிநிதிகள், சிவில் சமூகத்தினர், மதத் தலைவர்கள் மற்றும் மாணவர்களுடனும் பல சந்திப்புக்களை முன்னெடுத்திருந்தோம்.

அனைத்து தரப்பினரும் மாணவர்களாகிய நாம் முன்னெடுத்துள்ள நிலைப்பாடுகளையும், செயல்பாடுகளையும் மிகவும் வரவேற்றதோடு, முழு ஒத்துழைப்பை நல்குவதாகவும் கூறி நின்றனர். அத்தோடு பேரணி தமிழர் தேசத்தின் அடிப்படைகளை முன்னிறுத்தி நிற்க வேண்டும் எனவும் வலியுறுத்தி நின்றனர். மட்டுமல்லாது, இன்றைய தமிழ்த்தேசிய அரசியல் நிலைமைகளில் மாணவர்களே தீர்க்கமாக விடுதலை போராட்டத்தினை கையிலெடுத்து முன்செல்ல வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டனர். இக்கருத்துக்கள் யாவும் எம்மையும், நாம் முன்னெடுக்கும் எழுச்சிப் பேரணியையும் வலப்படுத்துவதாகவே நாம் காண்கிறோம்.

அந்த வகையில், தமிழ் மக்கள் மிகப் பேரெழுச்சியுடன் கூட்டாக தமிழ் மக்களின் அபிலாசைகளான பொங்கு தமிழ் எழுச்சியனூடாக வலியுறுத்தபட்ட சுயநிர்ணய உரிமை, மரபுவழித் தாயகம், தமிழ்த தேசியம் என்பவற்றை முன்னிறுத்தி முன்னெடுக்கும் இப்பேரணியை மேலும் வலுப்படுத்த வடக்கு கிழக்குத் தழுவிய எமது வர்த்தக சமூகத்தினரையும், கடற்றொழிலாளர்கள், தனியார் மற்றும் அரச பேரூந்து உட்பட அனைத்து தொழிற் சங்கங்களையும் நாளை பெப்ரவரி 4 கரிநாள் அன்று தொழில் புறக்கணிப்பையும், முழுமையான கடையடைப்பையும் மேற்கொண்டு ஹர்த்தாலை முழுமையாக அனுஸ்டித்து ஶ்ரீலங்காவின் சுதந்நதிர தினம் தமிழர் தேசத்தின் கரிநாள் என்பதை சர்வதேச நாடுகளுக்கு வெளிப்படுத்த வேண்டுமென்றும் உரிமையுடன் கேட்டு நிற்கின்றோம். அத்துடன் இத்தினத்தில் உங்களின் வீடுகள், வர்த்தக நிலையங்கள், கல்வி நிலையங்கள், தொழில் இடங்களில் கறுப்பு கொடிகளை பறக்கவிட்டு காலாகாலமாக நாம் சிங்கள பௌத்த பேரினவாத அடக்குமுறைக்கும், ஆக்கிரமிப்புக்கு எதிராக தமிழர் தேசமாக முன்னெடுக்கும் போராடத்தில் இணைத்து கொள்ளுமாறு கேட்டு கொள்கின்றோம்.




முன்னெடுக்கப்படும் வடக்கிலிருந்து கிழக்கு நோக்கிய இப்பேரணியானது நாளை 4ஆம் திகதி காலை 10 மணிக்கு யாழ் பல்கலைக்கழகத்தி லிருந்து ஆரம்பமாகி நாச்சிமார் கோவிலடியூடாக பிரதான தபால் அலுவலகம், தமிழாராய்ச்சி மண்டபம், மணிக்கூட்டுக் கோபுரம், ஆஸ்பத்திரி வீதி வழியாக கச்சேரியடியை வந்தடைந்து பின்னர் செம்மணியை சென்றடையும். செம்மணியிலிருந்து வாகனங்களில் பயணிக்கும் பேரணியானது நாவற்குழி, சாவகச்சேரி, கொடிகாமம், மிருசுவில், பளை, ஆனையிறவு, பரந்தன் ஊடாக கிளிநொச்சியை சென்றடைந்து முதலாம் நாளின் இறுதி நிகழ்வை இரணைமடுவில் நிறைவு செய்து கொள்ளப்படும்.

இரண்டாம் நாள் பேரணி 5 ஆம் திகதி காலை 9மணிக்கு பரந்தனில் ஆரம்பமாகி வவுனியா மற்றும் மன்னார் எழுச்சி அணிகளை இணைத்துக் கொண்டு காலை 10.30 மணியளவில் முல்லைத்தீவு நோக்கி புறப்படும்.செல்லும் வழியில் புளியம் பொக்கணை, தர்மபுரம், விசுவமடு, உடையார்கட்டு, மூங்கிலாறு ஊடாக புதுக்குடியிருப்பை வந்தடையும், அங்கிருந்து முள்ளிவாய்க்கால் சென்று

உறுதியெடுத்துக் கொண்டு முல்லைத்தீவைச் சென்றடையும்.

ஊடறுத்துச் செல்லும் அனைத்து ஊர்களிலும் அணிதிரளும் மக்களுடன் எழுச்சியாய் முன்னேறி முல்லைத் தீவை சென்றடையும் பேரணி இரண்டாம் நாளின் இறுதி நிகழ்வை முல்லைத்தீவில் நிறைவு செய்யப்படும்.

மூன்றாம் நாள் பெப்ரவரி 6 ஆம் திகதி காலை 7.30 மணிக்கு முல்லைத்தீவிலிருந்து ஆரம்பமாகி திருகோணமலை மாவட்டத்தின் தென்னமரவாடியூடாக திருகோணமலையை மதியம் 1.30 மணியளவில் வந்தடையும் பேரணி திருகோணமலையின் எழுச்சி நிகழ்வுகளில் இணைந்த கொள்ளும். பின்னர் திருகோணமலை மாவட்டத்தின் வெருகலில் மூன்றாம் நாள் நிகழ்வினை நிறைவு செய்யப்படும்.

நான்காம் நாள் பெப்ரவரி 7 ஆம் திகதி காலை 10 மணிக்கு பேரணி வெருகலிலிருந்து ஆரம்பமாகி வாகரை சென்று அங்கிருந்து மட்டு. நகரை வந்தடையும் அதேநேரம் அம்பாறை மாவட்டத்திலிருந்தும் பேரெழுச்சசியாக மக்கள் வந்து இணைந்து மாபெரும் பொதுக் கூட்டத்துடன் பேரெழுச்சியாக நிறைவு பெறும்.

இப்பேரணிகளில் மாணவர்கள், மதத்தலைவர்கள், பொதுமக்கள், சிவில் சமூக செயல்பாட்டாளர்கள், அரசியல் தரப்பினர் அனைவரும் அலை அலையாக இணைத்து தமிழ் தேசத்தின் நிலைப்பாட்டினை முழு உலகத்திற்கும் வெளிப்படுத்த அணிதிரளுமாறு அன்புரிமையுடன் வேண்டி நிற்கின்றோம்.

# சாய்ந்தமருது கரைவாகுபற்று ஆற்றங்கரையோரம் மரநடுகை நிகழ்வு

இலங்கையின் 75 ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு சாய்ந்தமருது கரைவாகுபற்று ஆற்றங்கரையோரம் மரநடுகை நிகழ்வு நேற்று (02) வியாழக்கிழமை நடைபெற்றது.

சாய்ந்தமருது பிரதேச செயலாளர் எம்.எம். ஆஷிக் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பிரதம அதிதியாக மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வி.ஜெகதீஸன் கலந்து கொண்டார்.

இதில் அதிதிகளாக உதவி பிரதேச செயலாளர் எம்.ஐ.முவஃபிகா, உதவி திட்டமிடல் பணிப்பாளர் கே.எல்.ஏ.ஹமீட், நிருவாக உத்தியோகத்தர் ஏ.சி.எம். பளீல், நிருவாக கிராம உத்தியோகத்தர் எம்.எஸ்.நளீர், சமுர்த்தி தலைமை பீட முகாமையாளர் ஏ.சீ.ஏ. நஜீம், மாவட்ட இளைஞர் சேவை அதிகாரி ஏ. முபாரக் அலி, சாய்ந்தமருது இளைஞர் பயிற்சி நிலைய பொறுப்பதிகாரி எச்.அமீர், கிராம உத்தியோகத்தர்கள், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் இளைஞர் கழக அமைப்புக்களின் உறுப்பினர்கள் என பலரும் கலந்து கொண்டு மரநடுகையில் ஈடுபட்டனர்.


















# முஸ்லிம் சமூகத்தின் பேச்சாளர் முஸ்லிம் காங்கிரஸ்!

## – அடித்துக் கூறுகிறார் மு.கா. தவிசாளர் அப்துல் மஜீத் –



எம்.எம்.அஸ்லம்

பௌத்த சிங்கள கடும்போக்குவாதிகளின் கூக்குரலுக்கு அஞ்சி, தமது கட்சிப் பெயரில் இருந்த முஸ்லிம் என்ற பதத்தை நீக்கிக் கொண்ட சில கட்சிகளை முஸ்லிம் சமூகத்தின் பேச்சாளர்களாக எப்படி அங்கீகரிக்க முடியும் என்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தவிசாளரும் முன்னாள் இணைந்த வடக்கு- கிழக்கு மாகாண சபையின் உறுப்பினருமான ஏ.எல்.அப்துல் மஜீத் கேள்வி எழுப்பியுள்ளார்.

முஸ்லிம் சமூதாயத்தின் அடையாளத்தை நிலைநிறுத்தி நிற்கும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸை இத்தேர்தலில் வெற்றி பெறச் செய்வதன் மூலமே முஸ்லிம் களின் உரிமைகளை வென்றெடுக்க முடியும் எனவும் அவர் வலியுறுத்தி யுள்ளார்.

உள்ளூராட்சித் தேர்தலில் காரைதீவு பிரதேச சபைக்கு முஸ்லிம் காங்கிரஸ் சார்பில் போட்டியிடும் வேட்பாளர்களை ஆதரித்து செவ்வாய்க்கிழமை (31) மாவடிப்பள்ளியில் இடம்பெற்ற தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

கட்சியின் தலைவர் ரவூப் ஹக்கீமின் பங்குபற்றுதலுடன் இடம்பெற்ற இக்கூட்டத்தில் அப்துல் மஜீத் மேலும் கூறியதாவது

1994ஆம் ஆண்டு உள்ளூராட்சி மன்றத் தேர்தலின்போது அம்பாறை மாவட்டத்தில் கல்முனை, சம்மாந்துறை, நிந்தவூர், அட்டாளைச்சேனை, அக்கரைப்பற்று, பொத்துவில் ஆகிய 6 முஸ்லிம் பிரதேச சபைகளில் ஒன்றிலேனும் முஸ்லிம் காங்கிரஸ் தோல்வியடை ந்தால் தனது பாராளுமன்ற உறுப்பினர் பதவியை துறப்பேன் என்று தலைவர் அஷ்ரஃப் பகிரங்க அறிவிப்பு செய்திருந்தார். தேர்தல் முடிவுகளின் படி 265 வாக்குகளால் நிந்தவூர் பிரதேச சபையும் 92 வாக்குகளால் பொத்துவில் பிரதேச சபையும் தோற்கடிக்கப்பட்டதனால் எத்தகைய சலனமும் இன்றி தனது பாராளுமன்ற உறுப்பினர் பதவியை துறந்து கனவான் அரசியலுக்கு பெருந்தலைவர் அஷ்ரஃப் முன்னுதாரணமாகத் திகழ்ந்தார்.

1977ஆம் ஆண்டு முதல் 1994ஆம் ஆண்டு வரை எதிர்க்கட்சியில் இருந்து வந்த ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை ஆட்சிக்குக் கொண்டு வந்த பெருமை முஸ்லிம் காங்கிரஸையே சாரும். 1994ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் இடம்பெற்ற பாராளுமன்ற தேர்தலிலும் அதே வருடம் நவம்பர் மாதம் இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தலிலும் சந்திரிக்கா அம்மையாரை ஆட்சிக்கு கொண்டு வர முஸ்லிம் காங்கிரஸ் உதவியது. அப்போது சந்திரிக்கா-அஷ்ரஃப் ஒப்பந்தம் முக்கிய மைல்கல்லாக அமைந்திருந்தது.

அண்மையில் இடம்பெற்ற அகில இலங்கை ஜம்மியத்துல் உலமா சபையின் நூற்றாண்டு நிறைவு விழாவில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தென்கிழக்கு பல்கலைக்கழகம் பற்றியும் தலைவர் அஷ்ரஃபின் அரசியல் ஆளுமை பற்றியும் சிலாகித்துப் பேசியிருந்தார், மட்டுமன்றி தென்கிழக்கு என்ற வார்த்தை பிரயோகத்தை பல தடவைகள் பயன்படுத்தி இருந்தார். தேசிய இனப்பிரச்சினைக்கான தீர்வு முன்வைக்கப்படும் போது தென்கிழக்கு மாகாண சபை ஒன்று நிறுவப்படுதல் வேண்டும் என்ற கோரிக்கை முஸ்லிம காங்கிரஸின் உருவாக்கத்தில் இருந்து இன்று வரை முன்கொண்டு செல்லப்படுகின்றது. தென்கிழக்கு பல்கலைக்கழகம் என்பது அதன் மையப் புள்ளியாகும்.

முஸ்லிம் சமூகத்தின் பேச்சாளர் முஸ்லிம் காங்கிரஸ் என்பதை என்னால் துணிவுடன் எடுத்துச் சொல்ல முடியும். கடந்த 26ஆம் திகதி வியாழக்கிழமை ஜனாதிபதி தலைமையில் இடம்பெற்ற சர்வகட்சி கூட்டத்தில் கட்சியின் தேசியத் தலைவர் ரவூப் ஹக்கீம், மன்னார் மாவட்டம் உட்பட கிழக்கில் பல மாவட்டங்களில் முஸ்லிம்கள் இழந்து நிற்கின்ற காணிப் பிரச்சனைகள் தொடர்பாகவும், முஸ்லிம் மக்களின் வாழ்விடம் மீள்குடியேற்றம் சம்பந்தமாகவும் ஆணித்தரமாக எடுத்துக் கூறியிருந்தார்.

மஹிந்த ராஜபக்ஷ அரசாங்க காலத்தில் இன அடையாளம் கொண்ட அரசியல் கட்சிகளை தடை செய்ய வேண்டும் என்ற குரல் பௌத்த சிங்கள கடும்போக்கு வாதிகளால் முன்வைக்கப்பட்டது. அவர்களின் கூக்குரலில் அச்சம் கொண்ட எம்மவரின் சில கட்சிகள், தமது கட்சிப் பெயரில் இருந்த முஸ்லிம் என்ற பதத்தை நீக்கிக் கொண்டன. இவர்களை முஸ்லிம் சமூகத்தின் பேச்சாளர்களாக எப்படி அங்கீகரிக்க முடியும்? முஸ்லிம் சமூதாயத்தின் அடையாளத்தை நிலைநிறுத்தி நிற்கும் முஸ்லிம் காங்கிரஸை வெற்றி பெறச் செய்வதன் மூலமே நமது உரிமைகளை வென்றெடுக்க முடியும்- என்று அப்துல் மஜீட் மேலும் குறிப்பிட்டார்.

# 5 கோடி ரூபா நிதியில் மருத்துவ நிலையம் திறந்து வைப்பு!



அபு அலா

லண்டன் Benefit Mankind நிறுவனத்தினால் 5 கோடி ரூபா நிதியின் கீழ் கிண்ணியா பூவரசடித்தீவில் நிர்மானிக்கப்பட்ட மருத்துவ நிலையம் (01) திறந்து வைக்கப்பட்டது.

அல்-மினா மகா வித்தியாலய அதிபர் எம்.வை.ஹதியத்துல்லாஹ் தலைமையில் இடம்பெற்ற இந்த திறப்பு விழாவுக்கு, திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபர் வி.எச்.என்.ஜயவிக்ரம மற்றும் கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் (திருமதி) ஜே.ஜே.முரளிதரன் ஆகியோர் பிரதம அதிதிகளாக கலந்துகொண்டு மருத்துவ நிலையத்தை திறந்து வைத்தனர்.

அல் ஹிக்மா நிறுவனத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி அப்பாஸ் இபாதுல்லாஹ், இக்கிராம மக்களின் நிலைமைகளைப் பற்றி லண்டன் Benefit Mankind நிறுவனத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் வைத்தியர் ஹாபீஸ் அப்துஸ் சமட் முல்லாஹ்வின் கவனத்திற்கு கொண்டு வந்ததையடுத்து இந்த தனியார் மருத்துவ நிலையம் நிர்மானிக்கப்பட்டு பொதுமக்கள் பாவனைக்கு கையளித்து வைக்கப்பட்டது.

இவ்விழாவுக்கு, லண்டன் Benefit Mankind நிறுவனத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் வைத்தியர் ஹாபீஸ் அப்துஸ் சமட் முல்லாஹ் மற்றும் றிஸ்வான் ஹர்தா, கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிமனையின் மாகாண சமூகநல மருத்துவ ஆலோகர் வைத்தியர் எஸ்.அருள்குமரன், கிண்ணியா பிரதேச செயலாளர் எம்.எச்.கனி, மூதூர் தள வைத்தியசாலையின் சத்திரசிகிச்சை நிபுணர் வைத்தியர் ஆர்.ரோஹான் குமார், குறிஞ்சாக கேணி சுகாதார வைத்திய அதிகாரி ஏ.எம்.எம்.அஜித் உள்ளிட்ட பல அதிதிகளும், பொதுமக்களும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.



கல்முனை பிரதேச செயலகத்தின் வழிகாட்டலில் முதற்கட்ட உணவு வங்கி செயற்திட்டம் நேற்று (02) கல்முனை பிரதேச செயலக உதவி திட்டமிடல் பணிப்பாளர் எம்.ஜெளபரின் நெறிப்படுத்தலின் கீழ் கல்முனை-01 மற்றும் கல்முனைக்குடி -11 கிராம சேவகர் பிரிவுகளில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இந்நிகழ்வுக்கு பிரதம அதிதியாக கல்முனை பிரதேச செயலாளர் ஜே.லியாகத் அலி கலந்து கொண்டார்.

இந்நிகழ்வில் உதவித் திட்டமிடல் பணிப்பாளர் எம். ஜௌபர், பிரதேச செயலக சிரேஸ்ட அபிவிருத்தி உத்தியோகத்தர்கள்,பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர். (சர்ஜுன் லாபிர)

# அரசின் வரிக்கொள்கைக்கு எதிராக தென்கிழக்கு பல்கலையில் போராட்டம்!










எம்.என்.எம்.அப்ராஸ்

அரசாங்கம் அறிமுகப்படுத்தியுள்ள புதிய வரி அதிகரிப்பிற்கு எதிர்ப்பு தெரிவித்து,தென்கிழக்கு பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத்தினரால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கவனயீர்ப்புப் போராட்டம் (01) பல்கலைகழக நுழைவாயிலில் இடம்பெற்றது.

தென்கிழக்கு பல்கலை கழகத்தின் ஆசிரியர் சங்க உயர்மட்ட உறுப்பினர்கள் உள்ளிட்ட பல்வேறு பீடங்களையும் சேர்ந்த பேராசிரியர்கள், சிரேஷ்ட, கனிஷ்ட விரிவுரையாளர்கள் என பலரும் கலந்து கொண்டிருந்த இப்போராட்ட நிகழ்வில் அரசு மேற்கொண்டுள்ள பாரிய வரி விதிப்புக்கு எதிராக பல்வேறு சுலோகங்கள் ஏந்தியவாறு நீதி கேட்டு கோஷங்களை எழுப்பினர்.

இதன் போது "அநீதியான வரிவிதிப்பை நிறுத்து", "அரசின் ஊழலால் விழுந்தவர்களை வரி ஏறி மிதிக்கிறது", "பணத்தை எடுத்தவரிடம் கேட்பதே நீதி எங்களிடம் கேட்பது அநீதி" போன்ற பதாகைகளை ஏந்தியாவாறு விரிவுரையாளர்கள் அமைதியான முறையில் கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

பின்னர் அரசுக்கும் மக்களுக்கும் தங்களது நிலைப்பாடுகளை தெளிவு படுத்தி கருத்துக்களும் தெரிவிக்கப்பட்டன.

## பிரதேச முக்கியஸ்தர்கள் நேரில் சென்று முதலிடம் பெற்ற மாணவனுக்கு வாழ்த்து



யூ.எல்.எம்.ஹரீஸ்

இம்முறை வெளியாகிய தரம்-5 புலமைப்பரிசில் பரீட்சை முடிவுகளின் அடிப்படையில் ஓட்டமாவடி கல்விக் கோட்டத்தில் அதிகூடிய (174 புள்ளிகளைப் பெற்ற வாழைச்சேனை வை.அஹமட் வித்தியாலய மாணவனான மொஹமட் ஜெஸீர் மஸ்ஹர் பைஸியைக் கௌரவிக்கும் வகையில் வாழைச்சேனை பிரதேச முக்கியஸ்தர்கள் பாடசாலைக்கு நேரில் சென்று பாராட்டுக்களை தெரிவித்து வருகின்றனர்.

கோறளைப் பற்று-வாழைச்சேனை பிரதேச சபை முன்னாள் உறுப்பினரும், மாவடிச்சேனை றியல் விளையாட்டுக் கழக தலைவருமான கே.எல்.அஸ்மி மற்றும் கோறளை மத்தி-வாழைச்சேனை கூட்டுறவு சங்க தலைவர் எம்.எப்.எம்.ஜௌபர் ஆகியோர் பாராட்டுக்களை தெரிவித்துள்ளனர்.

மாணவனுக்கு நினைவுச் சின்னம், பொன்னாடை போர்த்தி கௌரவித்ததனர்.

இந்நிகழ்வுகள் பாடசாலை அதிபர் யு.எல்.எம்.ஹரீஸ் தலைமையில் நடைபெற்றதோடு கற்பித்த ஆசிரியர்கான அஷ்ஷெய்க் மௌலவி எம்.ஐ.நௌபுதீன்(சிறாஜி) மற்றும் பீ.தயாபரன் ஆகியோரும் பாராட்டப்பட்டனர்.

## ஐந்து ஏக்கர் நிலப்பரப்பில் போசனை மிகுந்த மரக்கன்றுகள் நடும் நிகழ்வு

நூருல் ஹுதா உமர்

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஐ.எல்.எம் றிபாஸின் ஆலோசனைக்கும் வழிகாட்டலுக்கும் அமைவாக தாய் சேய் நலப்பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி வைத்தியர் ஏ.எச்.றிஸ்பினால் தாய் சிசு போசாக்கு திட்டத்தின் கீழ் தாய்மார்களின் குருதிச் சோகை நோயை குறைப்பதற்காகவும் முகாமைத்துவம் செய்வதற்காகவும் திருக்கோவில் தங்கவேலாயுதபுரம் கிராமத்தில் சுமார் 5 ஏக்கர் நிலப்பரப்பில் போசனை மிகுந்த பயிர் இனங்களை நடும் நிகழ்வு (28) இடம்பெற்றது.

இந்நிகழ்வில் திருக்கோவில் சுகாதார வைத்திய அதிகாரி மற்றும் பிரதேச வைத்திய வைத்திய அதிகாரி பொது



சுகாதார உத்தியோகத்தர்கள் பொது சுகாதார மாதுக்கள் மற்றும் ஏனைய கள உத்தியோகத்தர்களும் பங்கு பற்றினார்கள். குறித்த திட்டத்தி ற்கு அம்பாறை மாவட்ட செயலகம், திருக்கோவில் பிரதேச செயலகம், விவசாயத் திணைக்களம், Assets Based Community Development organization என்பன ஒத்துழைப்பு வழங்கி வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது

## சகவாழ்வை மேம்படுத்தும் வேலைத்திட்டம் !





நாட்டில் நல்லிணக்கம், சகவாழ்வு, சமாதானம், ஐக்கியம் ஆகியவற்றை ஏற்படுத்தும் முகமாக அனைவருக்குமான உரிமைகளும் சேவைகளும் உறுதிப்படுத்தப்பட்டு மதிக்கப்படுதல் வேண்டும். என்ற அடிப்படையில் ACTED நிறுவனத்தின் அனுசரனையில் இறக்காமம் ஹிக்மா சகவாழ்வு மன்றம் இணைந்து செயற்படுத்தும் "சகவாழ்வை கட்டியெழுப்புவதில் இளைஞர்களின் பங்களிப்பு" எனும் செயலமர்வு அம்மன்றத்தின் தலைவர் எம்.ஐ. பாயிஸ் தலைமையில் இறக்காமம் பிரதேச செயலகத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்விற்கு பிரதம அதிதியாக இறக்காமம் உதவி பிரதேச செயலாளர் எம்.ஏ.சி. அஹமட் நஸீல் கலந்து கொண்டதுடன் கௌரவ விருந்தினர்களாக கணக்காளர் றிம்ஷியா அர்சாட், பிரதி திட்டமிடல் பணிப்பாளர் கே.எல். ஹம்சார், கிராம நிலதாரி நிருவாக உத்தியோகத்தர் இந்திரசிறி யசரட்ன பண்டார ஆகியோர் கலந்து கொண்டனர்.

## பெரியளவு ஆமை கரை ஒதுங்கியது

வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பொன்னாலைக் கடலில் நேற்றைய தினம் இறந்த நிலையில் பெரிய அளவிலான ஆமை ஒன்று கரை ஒதுங்கியுள்ளது. பொன்னாலை பாலத்திற்கு அருகில் இவ்வாறு ஆமை கரை ஒதுங்கியுள்ளது.
சீரற்ற காலநிலையினால் ஆமை இறந்து கரை ஒதுங்கி இருக்கலாமென சந்தேகிக்கப்படுகிறது.



## 33 வருட கல்வி சேவையிலிருந்து ஓய்வு


பி.கேதீஸ்

நுவரெலியா கல்வி வலயத்திற்குட்பட்ட நுவரெலியா நல்லிளைப்பாற்றி மகளிர் பாடசாலையின் அதிபர் திருமதி ஜெயலட்ஷிமி பாலகிருஸ்ணன் 33 வருட கல்வி சேவையிலிருந்து அண்மையில் ஓய்வு பெற்றார்.

யாழ்ப்பாணம் காங்கேசன்துறையை பிறப்பிடமாகக் கொண்ட இவர் தனது ஆரம்பக்கல்வி, இடைநிலைக்கல்வி மற்றும் உயர்கல்வியை யாழ்ப்பாணம் நடேஸ்வரா கல்லூரியிலும் கற்றார். 1982 ஆம் ஆண்டளவில் யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் வணிகத்துறையில் பட்டப்படிப்பினை பூர்த்தி செய்த இவர்,1989 ஆம் ஆண்டு ஆசிரியர் சேவையில் இணைந்துகொண்டார். மேலும் பட்டப்பின் டிப்ளோமா கற்கை நெறியை கொழும்பு நாவல திறந்த பல்கலைக்கழகத்திலும் பூர்த்தி செய்தார். 2005 ஆம் ஆண்டு கல்வி முதுமாணி கற்கை நெறியை யாழ்ப்பாண பல்கலைக்கழகத்திலும் 2019 ஆம் ஆண்டு முகாமைத்துவ கற்கை நெறியை தேசிய கல்வி நிறுவகத்திலும் பூர்த்தி செய்தார்.

1989 ஆம் ஆண்டு முதல் 2004 ஆம் ஆண்டு வரை ராகலை தமிழ் மகா வித்தியாலயத்தில் கடமையாற்றிய இவர், 2005 ஆம் ஆண்டு நுவரெலியா பரிசுத்த திருத்துவ கல்லூரிக்கு இடமாற்றம் பெற்று சென்றார்.

2010 ஆம் ஆண்டு அதிபர் போட்டிப் பரீட்சையில் சித்தி பெற்று கொட்டகலை கேம்பிரிஜ் கல்லூரிக்கு பிரதி அதிபராக நியமனம் பெற்றார். 2018 ஆம் ஆண்டு அங்கிருந்து அதிபராக பதவி



உயர்வு பெற்று நுவரெலியா நல்லிளைப்பாற்றி மகளிர் பாடசாலைக்கு இடமாற்றம் பெற்றுச் சென்றார். அங்கு தொடர்ச்சியாக அதிபராக சேவையாற்றிய இவர் தனது 60 ஆவது வயதில் அண்மையில் ஓய்வு பெற்றார். இவர் யாழ்ப்பாணம் காங்கேசன்துறையைச் சேர்ந்த மயில்வாகனம் புவனேஸ்வரி தம்பதியினரின் இரண்டாவது புதல்வியாவார்.




sportsml77@gmail.com




# இலங்கை மகளிர் கிரிக்கெட் அணியின் ஆலோசகராக சுசந்திகா ஜயசிங்க

ஒலிம்பிக்கில் வெள்ளிப் பதக்கம் வென்ற சுசந்திகா ஜயசிங்க, இலங்கை மகளிர் கிரிக்கெட்டின், வழிகாட்டல் மற்றும் மேம்பாட்டு ஆலோசகராக நியமிக்கப்பட்டுள்ளார்.

2023, பெப்ரவரி 01 முதல் அமுலுக்கு வரும் வகையில் இந்நியமனம் வழங்கப்பட்டுள்ளதாக, இலங்கை கிரிக்கெட் நிறுவனம் அறிவித்துள்ளது.

இலங்கையில் மிகவும் பிரபலமான தடகள விளையாட்டு வீரர்களில் ஒருவரான ஜயசிங்க, தனது நாட்டிற்காக ஒலிம்பிக் பதக்கம் வென்ற ஒரே பெண் வீராங்கனை என்பதோடு, ஓட்டப் போட்டிகளில் ஒலிம்பிக் பதக்கம் வென்ற ஒரே ஆசிய பெண் தடகள வீராங்கனையுமாவார்.அவர் தனது துணிச்சல் மற்றும் உறுதிப்பாடு தொடர்பான அனுபவங்கள் மூலம் இலங்கையிலுள்ள தற்போதைய மற்றும் வருங்கால பெண் கிரிக்கெட் வீரர்களின் சந்ததியினருக்கு ஊக்கமளிப்பார் என எதிர்பார்ப்பதாக இலங்கை தெரிவித்துள்ளது. இந்த புதிய சவாலை ஏற்பதில் தாம் மிகவும் மகிழ்ச்சியடைவதாகவும், இது இளம் பெண் விளையாட்டு வீரர்கள் விளையாட்டில் ஈடுபடவும், சவால்களை சமாளிக்கவும், எதிர்காலத்தில் அவர்கள் தகுதியான “நட்சத்திரங்களாக“ மாற்றவும் தனக்கு ஒரு வாய்ப்பை அளிக்கப்படுவதாக, சுசந்திகா ஜயசிங்க தெரிவித்துள்ளார்.

# இலங்கை செஸ் சம்மேளன சம்பியன்ஷிப் போட்டியில் சாய்ந்தமருது சபிலுல் லமாஹ் சம்பியனானார்








**-ஹுதா உமர்-**

தேசிய இளைஞர் சதுரங்க போட்டியில் கல்முனை கல்வி வலய சாய்ந்தமருது அல்-ஹிலால் வித்தியாலய மாணவி சபிலுல் லமாஹ் 08 வயது பிரிவில் அம்பாறை மாவட்டத்தில் போட்டியிட்டு சம்பியனானார்.

“இலங்கை செஸ் சம்மேளனத்தின் ஏற்பாட்டில்” அம்பாறை மாவட்ட மாணவர்களுக்கான (ஆண், பெண்) செஸ் சம்பியன்ஷிப் போட்டியானது (சனி, ஞாயிறு) தினங்களில் சாய்ந்தமருது அல் ஹிலால் பாடசாலையில் நடைபெற்றது.

இதில் 08 வயது பிரிவின் கீழ் விளையாடி அனைத்து போட்டிகளிலும் வெற்றியீட்டி சபிலுல் லமாஹ் சம்பியனாக தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இவர் அடுத்த மாதம் கொழும்பில் நடக்கவிருக்கும் தேசிய மட்ட போட்டிக்கு தெரிவாகியுள்ள மையும் குறிப்பிடத்தக்கது.
இதில் வெற்றி பெறும் வீரர்கள் தேசிய ரீதியில் விளையாடக் கூடிய வாய்ப்பையும் சர்வதேச மட்டத்தில் விளையாடக் கூடிய வாய்ப்பையும் பெற்றுக் கொள்ள முடியும் என்பது குறிப்பிடத்தக்கது.

# இலங்கை செஸ் சம்மேளன சம்பியன்ஷிப் போட்டியில் மாளிகைக்காடு சபீனா மாணவர்கள் வெற்றி!

**-ஹுதா உமர்-**

தேசிய இளைஞர் சதுரங்க போட்டியில் கல்முனை கல்வி வலய மாளிகைக்காடு சபீனா முஸ்லிம் வித்தியாலய மாணவன் எம்.எச்.எம். ருசைக் 12 வயது பிரிவில் இரண்டாம் இடத்தையும், என். ஷராப் அஹமட் 12 வயது பிரிவில் மூன்றாம் இடத்தையும் பெற்றுள்ளனர்.

“இலங்கை செஸ் சம்மேளனத்தின் ஏற்பாட்டில்” அம்பாறை மாவட்ட மாணவர்களுக்கான (ஆண், பெண்) செஸ் சம்பியன்ஷிப் போட்டியானது இம்மாதம் 28, 29 (சனி, ஞாயிறு) திகதிகளில் சாய்ந்தமருது அல் ஹிலால் பாடசாலையில் நடைபெற்றது. இதில் 12 வயது பிரிவின் கீழ் விளையாடி இவர்கள் இந்த வெற்றியை பதிவு செய்துள்ளனர். இந்த வெற்றிக்காக உழைத்த பாடசாலை விளையாட்டு பயிற்றுவிப்பாளர் ஏ.எம். இர்ஷாத் உட்பட இந்த போட்டியில் கலந்து கொண்ட மாணவர்களுக்கு பாடசாலை சமூகம் வாழ்த்துக்களை தெரிவித்து கொண்டுள்ளது.

இந்த போட்டிகளில் வெற்றி பெறும் வீரர்கள் தேசிய ரீதியில் விளையாடக் கூடிய வாய்ப்பை யும், சர்வதேசமட்டத்தில் விளையாடக் கூடிய வாய்ப்பையும் பெற்றுக்கொள்ள முடியும் என்பது குறிப்பிடத்தக்கது.



